# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:1 ஜூன் 2025

## நன்றி



தற்காலத் தேவைக்கேற்பத் தொய்வின்றித் தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர ஏதுவாக ஒரு நேர நல்கையாக இரண்டு கோடி ரூபாய் நிதியுதவியை நிகழாண்டில் அளிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர், தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத்துறை அமைச்சர், நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஆகியோருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிக்கிறது.

## அறங்காவல் குழுத் தலைவர் உரை




ஒன்றிய அரசின் மாண்புமிகு மேனாள் அமைச்சரும், இன்றைய நாளாளுமன்ற மேலவை உறுப்பினரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழுத் தலைவருமான திரு ப. சிதம்பரம் அவர்கள், ஆட்சிக் குழு, அறங்காவல் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் இடையே 14.06.2025இல் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் திரு ம. இராசேந்திரனைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது மிகவும் நல்ல முடிவு; செம்மையான முடிவு; சிறந்த முடிவு. ம.ரா.வின் தலைமையில் மீண்டும் தமிழ் வளர்ச்சிக் கழகம் பெரியவர்கள் தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார், சி.சுப்பிரமணியம், வா. செ. குழந்தைசாமி, பெரியசாமித்தூரன் காலத்தில் இருந்ததைப்போல மீண்டும் உயிர்த்தெழுந்து மிகச் செம்மையாகச் செயல்படும் என்ற முழு நம்பிக்கை இருக்கின்றது.

ம.ரா. அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த பிறகு அறங்காவலர் குழுவுக்கு நீங்கள் தலைவராக இருக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டார்கள். எனக்குப் பழைய நினைவு வந்தது. பழைய அறங்காவல் குழுவில் நான் இருந்தேன். அந்தப் பழைய அறங்காவல் குழுவில் நான் மட்டும்தான் இப்போது இருக்கிறேன். மற்றவர்கள் இல்லை. இதை நான் அவருக்குச் சுட்டிக்காட்டினேன் அப்போதுதான் அவருக்கே தெரிந்தது நான் பழைய அறங்காவல் குழுவில் இருந்தேன் என்று. ஆனால் தொடர்ந்து ஒன்றும் என்னால் செய்ய முடியவில்லை. நான் அறங்காவல் குழுவில் இருந்த காலத்தில், 30, 40 வருடங்களுக்கு முன்பு ஒரு கூட்டம் நடந்தது. அது திரு சி சுப்ரமணியம் அவர்கள் இல்லத்தில் நடந்தது. அதற்குப் பிறகு கூட்டம் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. இது பழைய கதை.


அறங்காவல் குழுவிற்குத் தலைவராக இருக்க ஒப்புக்கொண்டேன். அதற்குப் பிறகு கலந்து பேசி இந்தத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினுடைய உயிர்ப்புக்குத் தேவை நிதிதான். நிதிதான் எல்லாவற்றிற்கும் காரணம். நிதி இல்லாமல் எதையும் செய்ய முடியாது. நிதி நெருக்கடியை முதலில் நீக்குவது என்று முடிவெடுத்து முன்னேறிக்கொண்டிருக்கிறோம்.



# தமிழ் வளர்ச்சிக் கழகம்




*அறிவுத்துறைகள் அனைத்திலும் தமிழ் வளர்ச்சி காண வேண்டும் என்னும் உயரிய நோக்கில் 1946ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் மாண்புமிகு மேனாள் கல்வி யமைச்சர் திரு* ***தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார்*** *அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பெற்று 35 ஆண்டுகள் அவரால் வழிநடத்தப்பெற்றது.*



*அதன்பின் பாரதரத்னா திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எட்டு ஆண்டுக் காலம் இக்கழகத்தை வழிநடத்தினார். தொடர்ந்து 27 ஆண்டுகள் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களும், அதன்பின் 7 ஆண்டுகள் முனைவர் மு. பொன்னவைக்கோ அவர்களும் இக்கழகத்தை நெறிப்படுத்திவந்தனர்.*



*24.10.2024 முதல் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்துவருகிறார்.*





தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவராக வேண்டும் என்று பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்கள் சொன்ன போதும் பிறகு அதன் துணைத்தலைவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் இ. சுந்தர மூர்த்தி அவர்களும் திரு கிருஷ்ண சந்த் சோர்டியா அவர்களும் தெரிவித்தபோதும் எனக்குள் தயக்கம் இருந்தது. இது பெரியவர்கள் தொடங்கிப் பெரியவர் களால் தொடரப்பட்ட பணி. இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பாகவே தமிழின் தேவை குறித்து எண்ணித் தொடங்கிய பெரியவர்களின் நோக்கம் என்னை யோசிக்க வைத்தது. அது தடைபடாமல் தொடர வேண்டும் என்பது என் தயக்கத்தைக் கேள்வி கேட்டது. அதனால் தமிழ் வளர்ச்சிக் கழகம் செயற் பட, வழிகாட்டத் தொடங்கிய முன்னோர்களின் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் மேனாள் ஒன்றிய அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்களைச் சந்தித்து ஆலோசனை பெறச் சென்றபோதுதான் அவர் அந்த நாள் அறங்காவல் குழுவில் இடம்பெற்றிருக்கும் செய்தியறிந்தேன். அறங்காவல் குழுத் தலைவராக வழிகாட்ட அவர் இசைந்தது, நான் தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகளை மேற்கொள்ளத் துணிவைத் தந்தது. அதன்பின் அறங்காவல் உறுப்பினர்கள், துணைத் தலைவர்கள் செயலாளர்கள், ஆட்சிக்குழுவினர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகளை மேன்மேலும் முன்னெடுத்துச் செல்கின்றன.

- ம. இராசேந்திரன்

## பாராட்டும் வாழ்த்தும்

**நல்லி குப்புசாமி அவர்கள் தொழிலதிபர், எழுத்தாளர், கொடை வள்ளல் எனப் பன்முகம் கொண்டவர்; கலை, பண்பாடு, கல்வி சார்ந்து பல நிதிக் கொடைகளை வழங்கியுள்ளவர்; தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழுவின் உறுப்பினர்; தமிழக அரசின் கலைமாமணி விருது (2000), ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ விருது (2003) ஆகியவற் றைப் பெற்றவர்; அண்மையில் பத்மபூஷண் விருது (2025) பெற்றுள் ளார். அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் பாராட்டை யும் வாழ்த்தையும் தெரிவிக்கிறது.**



# சொல் புதிது

தமிழ் ஊடகங்களில் அயல்மொழிச் சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.இதற்குக் காரணங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று, ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை என்பதாகும். இக்குறையினை நீக்கும் பொருட்டும், பிற துறை குறித்துத் தமிழில் எழுதுவோர்க்கு உதவும் வகையிலும், தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் **சொல் புதிது** என்னும் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. 2025 மே மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் இதற்கென அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு கூடி ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சிக் கழக வலைத்தளத்தில் வெளியிடப்படுகிறது. ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் கூட்டம் 2025 மே 21இல் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் 22 தமிழ்ச் சொற்கள் உருவாக்கப் பெற்றன:

1. Artificial intelligence - செய்யறிவு
2. Bluetooth - ஊடலை
3. Breaking news - அதிர்வுச் செய்தி
4. Bullet train - மின் வேகத் தொடரி/ இரயில்
5. Chatbot - உரையாடி
6. Data card - தரவட்டை
7. Dating - காதலுணர் காலம்
8. Default - இயனிலை
9. Disc brake - வட்டுத்தடை
10. Ear phone - செவிபேசி
11. Mayonnaise - சுவைக்குழைவு
12. Electric chimney - மின்புகைபோக்கி
13. Encrypted data - குறியாக்கத் தரவு
14. Endgame - இறுதியாட்டம்
15. Encryption - குறியாக்கம்
16. Ethical hacking - நன்னோக்க முடக்கம்
17. Fibre cable - இழைவடம்
18. Firmware - நிலைபொருள்
19. Game changer - ஆட்டமாற்றி/களமாற்றி
20. Garib Rath train - குறைகட்டணத் தொடரி / இரயில்
21. GIF file - இழப்பில்லாப் படமாற்றிக் கோப்பு (இ.ப.மா.)
22. Malware - கெடுபொருள்

இவ்வாறு தமிழில் உருவாக்க வேண்டிய ஆங்கிலச் சொற்கள் வரவேற்கப்படுகின்றன.ஆர்வமுள்ளோர் தமிழ் வளர்ச்சிக் கழக மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

# உலகத் தமிழியல் நூல் களஞ்சியம்

ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் வள மேம்பாட்டுக்கும் பெரிதும் உதவுபவை அம்மொழியில் உருவான வகைவகையான நோக்கு நூல்களே (reference works) எனலாம். அந்த நோக்கு நூல் வகைகளுள் ஒன்று நூலடைவு/நூல் விவர அட்டவணை (bibliography) ஆகும்.

1865இல் ஜான் முர்டாக் 281 பக்கத்தில் வெளியிட்ட Classified catalogue of Tamil printed books என்னும் சிறு நூல், 1867—1935 காலப் பகுதியில் வெளிவந்த நூல்களின் பட்டியலாய் 1961முதல் 1981வரை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வெளியிட்ட தமிழ் நூல் விவர அட்டவணை—7 தொகுதிகள் ஆகியவை அச்சில் வெளிவந்த தமிழ் நூல் விவர அட்டவணைகளுள் குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்தும் இன்றைய பயன்பாட்டிற்கேற்பப் புதுப்பிக்கபபட வேண்டும்.

தொழில்நுட்ப வளர்ச்சிப் பின்னணியில் உலகெங்குமுள்ள தமிழியல் அறிஞர்களும், ஆய்வாளர்களும், மாணவர்களும், பிறரும் இணையம்வழிப் பயன்கொள்ளும் வகையிலும் தேடுதல் வசதியுடனும், அன்றாடம் புதுப்பிக்கக் கூடியதாயும் உலகத் தமிழியல் நூற்களஞ்சியம் உருவாக்கும் தொடர் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. இது காறும் 28,000 தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.


நீங்கள் எழுதிய அல்லது அறிந்த நூல்களின் விவரங்களை அனுப்புக. ஒவ்வொரு தமிழ் நூலுக்கும், தமிழியல் சார் ஆங்கில நூலுக்கும் நூலின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பக விவரம், வெளிவந்த ஆண்டு, நூல் வகைமை, நூலின் பொருண்மை உள்ளிட்ட எல்லாத் தகவல்களையும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைப்பின் அவற்றை இக்களஞ்சியத்தில் சேர்க்க மிக்க உதவியாக இருக்கும். இந்தப் பயனுள்ள களஞ்சிய உருவாக்கத்தில் உங்கள் பங்களிப்பும் இருந்திட வேண்டும் அல்லவா? இத்திட்டம் பற்றி உங்களுக்கு வேண்டியவர்களிடம் எல்லாம் தெரிவித்து அவர்தம் பங்களிப்பையும் பெற்றுத் தருக.



# புரவலர்கள்



தமிழ் வளர்ச்சிக் கழக வைப்பு நிதிக்குப் பத்து இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்துள்ள திரு சிவாலயம் ஜெ. மோகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சிக் கழகத் திட்டப் பணிகளுக்கு உதவும் வகையில் ஐந்து இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்துள்ள திரு கிருஷ்ணசந்த் சோர்டியா அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியை யும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.





தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி திரட்ட முயற்சி மேற்கொண்டுள்ள அறங்காவல் குழுவினருக்கு, குறிப்பாகத் தலைவருக்குப் பாராட்டைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தெரிவித்துக்கொள்கிறது. முன்னெடுப்பாக ஆளுக்குப் பத்து இலட்சம் ரூபாய் தர முன்வந்துள்ள அறங்காவல் குழுத் தலைவருக்கும், அறங்காவல் குழு உறுப்பினர்கள் திரு முஸ்தஃபா அவர்களுக்கும், திரு சௌரிராசன் அவர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.

## நூல் விற்பனை (50% கழிவுடன்)

**தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.**

**தொடர்புக்கு:**

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**

**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**

**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**

**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**

## அஞ்சலி

### முதுமுனைவர் ச.சு. இராமர் இளங்கோ (10.09.1944–19.06.2025)



இராமர் இளங்கோ பெங்களூருவில் கல்லூரி ஒன்றில் பணியாற்றிப் பணி நிறைவுற்றபின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும், அதன்பின் சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பதிப்புத்துறை இயக்குநராகவும் பணியாற்றியவர்; பாரதிதாசன் படைப்புகளின் பதிப்புப்பணியையும் ஆய்வுகளையும் முன்னெடுத்தவர்; முதுமுனைவர் (டி.லிட்.) பட்டம் பெற்றவர். அன்னாரது மறைவுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அஞ்சலி செலுத்துகிறது.

### நெல்லை சு. முத்து (10.05.1951–16.06.2025)

## அஞ்சலி

நெல்லை சு. முத்து, ஸ்ரீ ஹரிகோட்டா சதீஸ் தவான் விண்வெளி மையத்தில் முதல்நிலை அறிவியலாளராகப் பணியாற்றியவர்; டாக்டர் அப்துல் கலாமுடன் இணைந்து பணியாற்றியவர்; அறிவியல், சிறுவர் இலக்கியம், கவிதை, வரலாறு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு எனும் வகைமைகளில் 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்; தமிழக அரசு அளிக்கும் சிறந்த நூலுக்கான பரிசை இவரது 4 நூல்கள் இவருக்கு ஈட்டித் தந்துள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுக் குழு உறுப்பினராக இருந்தவர். இவரது மறைவுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அஞ்சலி செலுத்துகிறது.

